DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO. 40/2012

DEPOSITION OF WITNESS 15 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : திரு. ஆவுடையப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.7.2019.

மு.வி.

நான் தற்போது கயத்தாறு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். 5.7.2011ம் தேதி நான் உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் வட்டகாவல் ஆய்வாளராக பணிசெய்து வந்தேன். அப்போது எனக்கு முன்பு உசிலம்பட்டி தாலுகா வட்ட காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்த எழுமலை வட்ட காவல் ஆய்வாளர் திரு தினகரன், அவர்கள் உத்தப்பநாயக்கனூர் காவல்நிலைய குற்ற எண்.98/2011, பிரிவு 302 இ.த.ச. வழக்கின் பெரும்பாலான புலன்விசாரணையை முடித்து வைத்திருந்ததை மேற்படி வழக்கு கோப்பினை நான் பெற்றுக்கொண்டு,பரிசீலனை செய்து பார்வையிட்டேன். அதன் அடிப்படையில் 13.7.2011ம் தேதி இவ்வழககின் தடய சொத்துக்களை காவலர் 1719 என்பவர் மூலம் இரசாயன பரிசோதனைக்காக உசிலம்பட்டி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.20. பின்பு 20.7.2011ம் தேதி உசிலம்பட்டி குற்றவியல்

நீதித்துறை நடுவர் எண்.2 தலைமை எழுத்தர் திருமதி மேரி லதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 8.8.2011ம் தேதி இவ்வழக்கின் கொலையுண்டு இறந்துபோன செல்வி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி, பரிமளாதேவி, அரசு மருததுவர், உசிலம்பட்டி அவர்களையும், மற்றும் மு.நி.கா.1514 பாண்டியராஜன் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 30.9.2011ம் தேதி இவ்வழக்கின் சான்றாவணங்கள் மற்றும் ஆய்வாளர் திரு தினகரன் அவர்கள் பதிவு செய்த வாக்குமூலங்களின் அடிப்படையிலும்,ட என் விசாரணையை முடித்து எதிரி மீது 302 இ.த.ச. படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். உயிரியல் அறிக்கை அ.சா.ஆ.21. குருதி வடி நீரியல் அறிக்கை அ.சா.ஆ.22.

கு.வி. எதிரி தரப்பில்

இறுதி அறிக்கையில் ஜீவனாம்ச வழக்கு, வரதட்சணை வழக்கு ஆகிய இரு வழக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இரண்டு வழக்குகளும் எந்தெந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என பார்த்தீர்களா என்றால் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாமல் இருந்தபடியால் அதனை நான் பார்க்கவில்லை. உசிலம்பட்டிநீதிமன்றத்தில் மேற்படி எதிரி மீது வழக்கு இருந்திருந்தால், டைரியில் புகார்தாரர் வந்தாரா அல்லது எதிரி வந்தாரா என்ற விவரம் இருக்கும் என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் என்னால் கூறமுடியும். இறுதி அறிக்கையில் கூறியுள்ள ஜீவனாம்ச வழக்கு, வரதட்சணை கொடுமை வழக்கு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வழக்கு சம்பவ தினத்தில் விசாரணைக்கு வந்ததா என என் விசாரணையின் மூலம் பார்க்கவில்லை. தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி சம்பவ தினத்தில் எதிரிக்கு வழக்குகள் இருந்ததா என நீதிமன்ற நடுவரையோ, அங்குள்ள நீதிமன்ற ஊழியரையோ விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. இறந்தவரின் வழக்கறிஞரை மேற்படி வழக்குகள் சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை. வரதட்சணை மற்றும் ஜீவனாம்ச வழக்கில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் யார் என விசாரிக்கவில்லை. நான் வரதட்சணை வழக்கு கமற்றும் ஜீவனாசம்ச வழக்கு சம்பந்தமாக உசிலம்பட்டி நீதிமன்றத்தில் பி டைரியை பார்த்தேன் என்றும், சாட்சிகளையும் விசாரணை செய்தேன் என்றும், மேற்படி சாட்சிகள் விசாகரணை செய்த

விவரத்தையும் பி டைரி பார்த்த விவரத்தையும் நீதிமன்றத்தில் சொன்னால் எனது வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தால் காவல்நிலையத்தில் உள்ள நீதிமன்ற போலிசார், நீதிமன்ற வழக்கு நாட்குறிப்பில் அதுகுறித்த விவரம் குறித்து வைத்திருப்பார் என்றால் சரி. அதில் வழக்குகள் என்று வாய்தாவிற்கு வந்தது, எந்த தேதியில் சாட்சிகள் ஆஜரானார்கள் என்ற விவரம் இருக்கும் என்றால் சரி. நீதிமன்ற வழக்கு நாட்குறிப்பை பார்த்தீர்களா என்றால் அப்பொழுது நான் பார்த்தேன். தற்போது ஞாபகம் இல்லை. வரதட்சணை வழக்கில் பராமரித்து வந்த போலிஸ் அதிகாரியை இந்த வழக்கிற்காக விசாரித்தேனா என்றால் தேவைப்படாததால் விசாரிக்கவில்லை. மேற்படி நாட்குறிப்பையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் அனுப்பவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி நாட்குறிப்பு வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்ற காரணத்தினால் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் எர்ணாகுளம் பக்கத்தில் 5 கி.மீ. தொலைவில் உள்ள தேவுபிரி என்ற இடத்தில் தங்கி, முருககு போடும் தொழில் செய்து வந்தேன் என்று இருக்கிறது என்றால் எனக்கு முந்தைய ஆய்வாளர் திரு தினகரன் அவர்களால் பதிவு செய்யப்பட்டுளளதுரு. மேற்படி தேவுபிரி என்ற இடத்தில் உள்ள நபர்கள் யாரையும் இந்த வழக்கிற்காக விசாரித்தீர்களா என்றால் தேவைப்படாததால் விசாரிக்கவில்லை. இந்த வழக்கின் சம்பவயிடத்தை நான் சென்று பார்த்தேன். ஏற்கனவே திரு தினகரன் தயார் செய்திருந்த பார்வைமகஜர், மாதிரி வரைபடம் சம்பவயிடத்திற்கு ஒத்திருந்தபடியால் நான் அவைகளை தனியாக தயார் செய்யவில்லை. வரதட்சணை கொடுமை வழக்கில் தயார் செய்யப்பட்டட பார்வைமகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை ந்த வழக்கில் பார்வையிட்டீர்களா என்றால் தேவைப்படாததால் பார்வையிடவில்லை. நான் சம்பவயிடத்தை பார்வையிட்டபோது பார்த்த சம்பவங்கள் இவ்வழக்கிற்கு விரோதமாக சென்றவிடும் என்ற காரணத்தினால் அவைகள் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கேரளாவிற்கு சென்று எதிரியை பற்றி விசாரணை செய்தேன் என்றும், அவை வழக்கிற்காக மறைக்கப்பட்டுவிட்டன என்றால் சரியல்ல. இறந்தவரின் தாயாரை இவ்வழக்கில் விசாரிக்கவில்லை. இறந்தவரின் தாயாரை நான் விசாரித்தேன் என்றும், அவரது

வாக்குமூலம் இவ்வழக்கிற்காக விரோதமாக சென்றுவிடும் என்பதால் அது மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இரசாயன ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட பொருட்களை நான்தான் அனுப்பினேன். இறந்தவரின் இரத்த மாதிரி பெறப்பட்டு அதை நான் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பவில்லை. இவ்வழககில் புலன்விசாரணையில் தெரிந்த சங்கதிகளை மறைத்து ஒருதலைபட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். ஆவுடையப்பன்

ஒப்பம். ளளள, முதன்மை மாவட்ட நீதிபதி, மதுரை